நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு. எஸ். பாக்கியராஜ், B.Sc., B.L.,
நீதித்துறை நடுவர் எண். 1
2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 –ம் நாள் வெள்ளிக்கிழமை

**M.P.No.17/2026**

**in**

**STC.No.79/2025**

வழக்கின் தரப்பினர்களின் பெயர் விவர குறிப்பு

திருமதி. சுப்புலட்சுமி
– மனுதாரர் / எதிரி

//எதிராக //

திரு.ராஜா சிதம்பரம் – எதிர்மனுதாரர் /புகார்தாரர்

மனுதாரர்/எதிரி சார்பாக வழக்குரைஞர் திரு.A.C. கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/புகார்தாரர் சார்பாக வழக்குரைஞர் திரு.A.பத்மநாதன் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதமும் கேட்டும் ஆவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுதாரர் / எதிரி தரப்பில் வருமான வரித்துறை அலுவலர், வார்டு – 1 திண்டுக்கல் அவர்களை எதிரி தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், புகார்தாரர் ராஜா சிதம்பரம் தனது தரப்பு குறுக்கு விசாரணையின் போது கடந்த 2022–2025 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், தனது தரப்பு சாட்சியாக வருமான வரித்துறை அலுவலர் வார்டு – 1 திண்டுக்கல் மாவட்டம் அவர்களை விசாரணை செய்து புகார்தாரரின் PAN Number –

ACBPR2203H என்ற எண்ணிற்கு 2022-2023, 2023-2024, 2024-2025 ஆண்டிற்கான வருமான வரி கணக்குகளையும், Income Tax Returns of the complainant for the accessment year of 2022-2023. 2023-2024. 2024-2025 மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்களையும் குறியீடு செய்ய வேண்டியிருப்பதால் மேற்படி வருமான வரித்துறை அலுவலர் அவர்களை விசாரணை செய்ய அனுமதி வழங்கியும், ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் / புகார்தாரர் தரப்பு எதிர் வாதம்**

எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில், தான் பிராது தாக்கல் செய்த போதும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்த போது தன் தரப்பு ஆவணமாக 2023-2024 ஆண்டிற்கான வருமான வரி சரல் தாக்கல் செய்திருப்பதாகவும், அது ம.தா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தேவைப்பட்டால் முறையீடுதாரரே 2022-2023, 2023-2024, 2024-2025 வருமான வரி சரளை தாக்கல் செய்ய தயாராக இருப்பதாகவும், அதற்காக வருமான வரி அலுவலர் அவர்களை விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், எதிரி தரப்பு சாட்சியம் முடித்துவைக்கப்பட்ட பின்பு இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே இம்மனு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

மனுதாரர் / எதிரி தரப்பில் குவிமுச 313 ன் கீழான விசாரணையின் போது புகார்தாரரை யார் என்றே தெரியாது சொத்தை என் மகன் தான் நிர்வகித்து வந்தார் அவர் தான் வரவு செலவு உள்ளிட்ட பரிவர்த்தனைகளை பார்த்து வந்தார் என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் **எதிரி தரப்பில் எதிரி எ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது முதல் விசாரணையில்** " எனக்கு புகார்தாரர் ராஜா சிதம்பரம் என்பவரை தெரியாது. நான் அவரிடம் காசோலை கொடுக்கவில்லை. எனது மகன் ஸ்ரீராம். 13.07.2024 ம் தேதி அன்று இறந்துவிட்டார். எனது மகன் இறப்பதற்கு முன்பு எனது பெயரில் சுப்பு லெட்சுமி கான்ட்ராக்டர் என தொழில் செய்து வந்தார். அதில் நான் எந்த வேலையும் செய்யவில்லை. அந்த நிறுவனத்தை வைத்து சாலை அமைக்கும் பணி செய்து வந்தார். எனது மகன் தான் நிறுவனத்தின் நிர்வாகத்தை பார்த்து வந்தார். அவர் வசம் தான் காசோலைகள் இருந்தது. இந்த வழக்கு காசோலையும் அவர்தான் புகார்தாரருக்கு கொடுத்து உள்ளார். புகார்தாரருக்கும் எனக்கும் எந்த வரவு

செலவும் இல்லை . நான் அவரை பார்த்தது இல்லை. இந்த வழக்கு எவ்வளவு தொகைக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.அது எனது கணவருக்கு தான் தெரியும்.23.04.2023ம் தேதியில் இருந்து நான் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டேன்.மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன்.அதன் பிறகு வீட்டில் இருந்து வருகிறேன். நான் சிகிச்சையில் இருந்தற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். இந்த வழக்கை தவிர புகார்தாரர் ஒரு கோடி கேட்டு சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் வெற்று காசோலையாக நிரப்பாமல் கையொப்பம் போடாமல் வீட்டில் இருந்த சோ கேசில் வைத்திருந்தேன். " என சாட்சியமளித்துள்ளார்.

**மேலும் எ.சா.1ன் குறுக்கு விசாரணையில்** " சுப்புலெட்சுமி கான்ட்ராக்டர் நிறுவனத்தின் உரிமையாளர் நான் என்றாலும் அதன் லைசன்ஸ் எனது பெயரில் உள்ளது என்றாலும் சரிதான். அதை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். சுப்புலெட்சுமி கான்ட்ராக்டர் நிறுவனம் இன்று வரை எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். ராஜா சிதம்பரம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். 30.10.2024ம் அன்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் எனது கணவர் தான் அனுப்பினார். அந்த பதில் அறிவிப்பில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. மேற்படி பதில் அறிவிப்பில் நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மருத்துவ ஆவணங்கள் கடன் வாங்கிய தேதி மற்றும் காசோலை கொடுத்த தேதியிலும் இல்லை என்றால் தெரியவில்லை. எனக்கு இடது கை வரவில்லை என்றாலும் வலது கை நன்றாக உள்ளது என்றாலும் சரிதான். தற்போது வரை நிறுவன நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை தெரியாது என வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் புகார்தாரருக்கும் வங்கி பரிவர்த்தனை நடந்துள்ளது என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் கடன் பெற்றுள்ளேன் என்றாலும் அதற்காக காசோலை கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மருத்துவ சான்றிதழக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சட்டப்படி தொகை செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. " என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியை விசாரணை செய்ய வேண்டியிருப்பதற்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள்

ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எதிர்மனுதாரர் / புகார்தாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள வாதங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு மனுதாரர்/எதிரிக்கு எதிராகவும் எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு ஆதரவாகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**எனவே இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது,**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் 24.07.2026 இன்று அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.07.24 17:21:17 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

1. மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் எதுவும் இல்லை.
2. எதிர் மனுதாரர்/ புகார்தார் தரப்பு சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.07.24 17:21:22 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.